**காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்**
**31.10.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்**
**தீர்மானம் நகல்கள்**

**பொருள் எண்: 1**

காயல்பட்டினம் நகராட்சியின் நகர்மன்ற துணை தலைவர் திரு. Z.A. சுல்தான் லெப்பை அவர்கள் 18 வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**பொது**

- மாண்புமிகு அண்ணாச்சி அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களின் பெறும் முயற்சியால் காயல்பட்டினம் தீவுத் தெருவில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டியினை அமைச்சர் அவர்களே திறந்து வைத்தார்கள் எங்கள் பகுதி மக்கள் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுதல்
- காயல்பட்டினம் நகராட்சி எல்கையில் சாகுபுரம் பகுதியில் அமைந்துள்ள தாரங்கதாரா கெமிக்கல்ஸ், (DCW LTD) தொழிற்சாலையில் காயல்பட்டினம் நகர் பகுதி மக்களுக்கு சுமார் 30 விழுக்காடு வேலை வாய்ப்பு வழங்குமாறு DCW நிர்வாகத்தை கேட்டுக்கொண்டு நகராட்சி உறுப்பினர்கள் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றுதல்.

**குடிநீர் பணிகள்**

- காயல்பட்டினம் தீவுத் தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி உள்பகுதியில் பேவர் பிளாக் சுற்று சுவர் அமைக்கபட உள்ளது. நீர் தேக்க தொட்டி வளாகத்தில் ரோடு பகுதியில் தண்ணீர் திறப்பு வால்வுகள் அமைந்துள்ளதால், அப்பகுதி மதரஸா மாணவர்களும் புகாரி ஷரீஃப் சபையில் விழாக்கள் நடைபெறும் போது பெண்கள் அப்பகுதியை நடைபாதையாக உபயோகிப்பதால் நீர் திறப்பு வால்வு தொட்டிகள் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. அதை மாற்றி உள்பகுதியில் அமைத்து தருமாறு கோருதல்.

**தெருமின் விளக்கு**

- காயல்பட்டினம் நகர் பகுதியில் புதிய தெருமின் விளக்குகள் பொருத்துவதற்கு டெண்டர் விடப்பட்டு பணி துவங்கப்பட உள்ள நிலையில் மின்விளக்கு இல்லாத இடங்களில் முதலில் தெருமின் விளக்குகள் பொருத்தி தருமாறு கோருதல்.

**தீர்மானம் எண்.529**

- மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நகர்மன்றத்தின் சார்பாக ஏக மனதாக தீர்மானிக்கப்படுகிறது.
- இந்நகர் பகுதி மக்களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு வழங்குமாறு DCW நிர்வாகத்தை கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்: 2**

காயல்பட்டினம் நகராட்சியின் 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. N.பூங்கொடி அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**தெருவிளக்கு**

- 9வது வார்டில் உள்ள அனைத்து தெருக்களிலும் தெருமின் விளக்குகள் இல்லாத இடங்களில் புதிய மின்கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்துவதற்கும், ஏற்கனவே மின் கம்பங்கள் மட்டும் நிறுவப்பட்டு தெருமின் விளக்கு இல்லாத இடங்களில் புதிய தெருமின் விளக்குகள் பொருத்தி தர கோருதல்.

**சாலை வசதி**

- 9வது வார்டுக்குட்பபட்ட அனைத்து தெருக்களிலும் உள்ள மணல் சாலைகளை அளவீடு செய்யப்பட்டு அனைத்து மண் சாலைகளையும் தார்சாலையாக மாற்றி தர கோருதல்.
- 9வது வார்டு பகுதியில் புதிதாக அமைக்கப்படும் அனைத்து சாலைகளிலும் வேகத்தடை அமைத்து வர்ணம் பூசி தர கோருதல்.

**குடிநீர்**

- 9வது வார்டு L.R.நகரில் புதிதாக சாலை பணிகள் நடந்து கொண்டு இருப்பதால் அப்பகுதியில் புதிய குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்து அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க கோருதல்.

**பொது**

- 9வது வார்டிற்குட்பட்ட கீழலெட்சுமிபுரம் தெருவில் 16-க்கும் மேற்பட்ட சிறுவர்கள் இரத்தினாபுரி அங்கன்வாடிக்கு சென்று வருகிறார்கள். மெயின் ரோடு தாண்டி சிறுவர்கள் சென்று வருவதால் சிறுவர்களின் பெற்றோர்கள் அச்சம் அடைகிறார்கள். எனவே,சிறுவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கீழலெட்சுமிபுரத்தில் ஓர் அங்கன்வாடிமையம் புதிதாக அமைத்து தர கோருதல்.
- 9வது வார்டு பகுதியில் அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை வைத்து தர கோருதல்.

**<u>தீர்மானம் எண்.530</u>**

- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலைகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.
- குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சி நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்:3**

காயல்பட்டினம் நகராட்சியின் 11வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. செய்யது ஆசியா ஃபஹ்மிதா அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**குடிநீர்**

- மொகுதூம் தெருவில் அமைந்துள்ள தண்ணீர் திறக்கும் வால்வு அமைக்கப்பட்டுள்ளது. அங்கு அசுத்தங்கள் சேராதவாறு சுற்றிலும் மூடியுடன் கூடிய சிறிய தொட்டி அமைக்க கோருதல்.

- மொகுதூம் பள்ளி மையவாடி வளாகத்தில் அமைந்துள்ள நீர்தேக்க தொட்டியிலிருந்து தண்ணீர் நிரம்பி வழிந்து மைய வாடியிலுள்ள அடக்கஸ்தலங்களுக்குள் தண்ணீர் செல்வதால் அங்குள்ள அடக்கஸ்தலங்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளது. மொகுதூம் பள்ளியால் நகராட்சிக்கு வழங்கப்பட்ட நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தை நகராட்சி நிர்வாகம் உடனடியாக தண்ணீர் வழிந்தோடாதவாறு சுற்றுச்சுவர் அமைத்து பாதுகாக்க கோருதல் .

**சாலை வசதி**

- பிரின்ஸ் வீதியில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணியை விரைந்து முடித்து அப்பகுதியில் புதிய சாலை அமைக்க கோருதல்.

**மின் விளக்கு**

- நகர் முழுவதும் தெருமின்விளக்குகள் இல்லாத பகுதிகளில் புதிதாக தெருமின் விளக்குகள் அமைத்திட கோருதல்.

**சுகாதாரம்**

- தைக்கா தெரு பழைய ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி இருந்த இடம் தற்போது பராமரிப்பின்றி விஷஜந்துக்கள் மற்றும் சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளதால், அவ்விடத்தில் அங்கன்வாடி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள கோருதல்.

**பொது**

- காயல்பட்டினம் நகர் முழுவதும் நாய் தொல்லை அதிகரித்துள்ளதால் அதனை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க கோருதல்.
- காயல்பட்டினம் கடற்கரையில் வாகன நிறுத்தத்திற்கு கட்டண வசூல் செய்யும் குத்தகைதாரருக்கு உரிய எல்லையை நகராட்சி நிர்வாகம் நிர்ணயிக்க கோருதல்.
- காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கடற்கரையில் மீன்பிடிப்பதற்கு பூர்வீகமாக கொண்டவர்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது என்பதை நகராட்சி நிர்வாகம் உறுதிபடுத்திட கோருதல்
- காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட கடையக்குடி குடியிருப்பு பகுதியிலுள்ள மக்களுக்கு நகராட்சி மூலம் வழங்கப்படும் அனைத்து ஆவணங்களிலும் கடையக்குடி என்ற பெயரை மட்டும் குறிப்பிட்டு உறுதிப்படுத்திட கோருதல்.

**<u>தீர்மானம் எண்.531</u>**

- பழுது நீக்க பணிகள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்படுகிறது
- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
- PMJVK திட்டத்தில் புதிய அங்கன்வாடி அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.
- பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்:4**

காயல்பட்டினம் நகர்மன்ற தீர்மான எண்.453 நாள்.27.07.2023-ன்படி, 2023-2024 ஆம் ஆண்டு குடிநீர் மற்றும் வடிகால் நிதியில், இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள சுமார் 176 குடிநீர் வால்வுகளை திறந்து சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு ரூ.4,00,000/- மதிப்பீட்டில் பணிகள்

மேற்கொள்வதற்கு 30.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 5.618 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(கோப்பு எண்.1378/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.532</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:5**

காயல்பட்டினம் நகர்மன்ற தீர்மான எண்.454 நாள்.27.07.2023-ன்படி, 2023-2024 ஆம் ஆண்டு குடிநீர் மற்றும் வடிகால் நிதியில், இந்நகராட்சி பகுதி மற்றும் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை உடனடியாக சரி செய்யவதற்கு ரூ.4,00,000/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு 30.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.033 % குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 1.082 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர

அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(கோப்பு எண்.1379/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.533</u>**

- அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:6**

காயல்பட்டினம் நகர்மன்ற தீர்மான எண்.455 நாள்.27.07.2023-ன்படி, 2023-2024 ஆம் ஆண்டு குடிநீர் மற்றும் வடிகால் நிதியில், இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் மற்றும் பம்புகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி இயக்குவதற்கு ரூ.4,00,000/- மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்வதற்கு 30.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீட்டு விலைவிகிதம் |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.691 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.1380/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.534</u>**

- அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:7**

காயல்பட்டினம் நகராட்சியின் பரப்பளவு 12.50 சதுர கீலோ மீட்டர் ஆகும். நகராட்சி தலைமை குடிநீர் நீரேற்று நிலையம் ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் நகர்பகுதியில் இருந்து சுமார் 27 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மேற்கண்ட பகுதிக்கு அவ்வவ்போது குடிநீர் ஆதாரம் மற்றும் விநியோகம் பற்றி தெரிந்து கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை, பொதுசுகாதாரம், தெருவிளக்கு, திட்ட பணிகள் மற்றும் இதர பணிகளை பார்வையிடுவதற்கு அடிக்கடி செல்ல வேண்டியுள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களையும், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களையும், மற்றும் பிற மாவட்ட உயர் அதிகாரிகளையும், காயல்பட்டினம் நகராட்சி அலுவலக பணி நிமித்தமாக சென்று பார்த்து வருவதற்கு நகராட்சி ஆணையாளர் தற்போது பயன்படுத்தி வரும் மஹிந்திர போலிரோ ஈப்பு வாகனம் TN 69U 9148 வாங்கப்பட்டு 16 வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில் இந்த வாகனம் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால், பயணத்தின் போது அசாதாரண சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால், குறிப்பிட்ட நேரத்திற்கு சென்று வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. மேலும், இந்த வாகனத்திற்கு பராமரிப்பு செலவினங்கள் அதிகமாகிறது. இவ்வாறான சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு முதிர்ந்த (Fitness Expired) நிலையில் உள்ள இந்த வாகனத்தை கழிவு செய்து நகராட்சி ஆணையாளர் பயன்பாட்டிற்கு புதிதாக ஈப்பு வாகனம் ஒன்று கொள்முதல் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இந்நிலையில் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக வாகனம் வாங்க வேண்டி இருந்தால், 31.12.2023-க்குள் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1725/2022/எம்எ1 நாள்.21.08.2023 –ல், தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளருக்கென புதிதாக ஈப்பு வாகனம் Mahidra Bolero ஒன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று (GEM Govt. e Market Prize) விலைவிகிதத்தில் வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கும், நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. முதிர்ந்த நிலையில் உள்ள இந்த வாகனத்தை கழிவு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி ஆணையாளர் பயன்பாட்டிற்கு புதிதாக மஹிந்திரா போலிரோ ஈப்பு வாகனம் ஒன்று (GEM Govt. e Market Prize) விலைவிகிதத்தில் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு வழிமுறையாக கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1647/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.535</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:8**

2023-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை துவங்கப்பட உள்ள நிலையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தயார் நிலையில் இருக்குமாறு மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் ஆய்வு தொடர்ந்து நடத்தப்படும் ஆய்வு கூட்டங்களின் வாயிலாக

அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி ஜேசிபி வாகன எண். TN92B 8679-ல் பழுதுகள் ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றை நீக்கம் செய்வதற்கு (1) இஞ்சின் ஆயில் மாற்றுதல் (2) கியர் ஆயில் மாற்றுதல் (3) கிரவுன் ஆயில் மாற்றுதல் (4) டிப்பர், ஜாக்கி ஆயில் மாற்றுதல் (5) ஜாக்கி ஓஸ் மாற்றுதல் (6) ஜாக்கி ஆயில் சில் மாற்றுதல் (7) கீரிஸ்கள் வேண்டும் (9) ஓரீங் கிட் போன்ற பராமரிப்பு பணிகளையும், இதர பழுது நீக்க பணிகளையும் செய்து தருமாறு இவ்வலுவலக ஓட்டுநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி இந்நகராட்சி ஜேசிபி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் உடனடியாக செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு ஜேசிபி வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s.ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சி, தூத்துக்குடி என்ற நிறுவனம் மூலம் ரூ.92,931/-க்கு எண்.230081387 நாள்.10.10.2023-ன்படி, விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு மேற்படி, நிறுவனம் மூலம் உடனடியாக பழுது நீக்க பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்ப்டுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. ஜேசிபி வாகனம் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து கொடுப்பதற்கு ரூ.92,931/-க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சி, தூத்துக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஜேசிபி வாகனம் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண். 165/2018/அ3)**

**<u>தீர்மானம் எண்.536</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:9**

காயல்பட்டினம் நகராட்சி TN92A6369 ஈப்பு வாகனத்தில் (1)சஸ்பென்ஸர் பால்ஜாயின்ட் தேய்மானம் St.பால்ஜாயின்ட் ரியர் சஸ்பென்ஸர் புஸ்கிட் (2) ஆல் ஆயில் சேஞ் ஆயில்பில்டர் ஏர்பில்டர் டீசல் பில்டர் சேஞ் (3) பிரேக் செக்கப் & லைனிங் கிரிஸ் பேக்கிங் பேரிங் (4) கிளட்செக்கப் (5) எலட்ரிக்கல் செக் ஹெட்லைட்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் (6) ரிவர்ஸ் கேமரா யூனிட் செட் (7) இன்டிரியர் கிளினிங் வாட்டர் வாஷ் சர்வீஸ் வீல் அலாய்மென்ட் வீல் பேலன்ஸ் (8) சைலன்ஸ்சர் டிங்கர் ஓர்க்ஸ் ப்ரன்ட் டேஸ்போர்டு லாக்செட் ஆகிய பழுது நீக்க பணிகள் செய்து தருமாறு இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநர் (மா.ப) கோரப்பட்டுள்ளது.

மேற்காணும் ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை மோட்டார் வாகன பராமரிப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை மோட்டார் வாகன பராமரிப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண்.81/2017/அ3)**

**தீர்மானம் எண்.537**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:10**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி, வார்டு எண்.15 அலியார்தெரு துவக்கப்பள்ளியில் அங்கன்வாடி கட்டிடம் அமைக்கும் பணிக்குரிய மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/6025/2022, நாள்.01.09.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 16.10.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.10 % குறைவு |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர். | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.51 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைவிகிதத்திற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். திட்டபணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1266/2023/ இ1)**

**தீர்மானம் எண்.538**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:11**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி, டிரைவர் காலனி மேற்குத் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.479 நாள்.30.08.2023-ன்படி, அனுமதி பெற்றப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/6025/2022, நாள்.01.09.2023-ந் தேதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்காணும் பணிக்கு 16.10.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி. | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.11 % குறைவு |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர். | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.58 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைவிகிதத்திற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். திட்டபணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1266/2023/ இ1)**

**தீர்மானம் எண்.539**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:12**

மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.136/செ.ம.தொ.அ/2023 நாள்:17.08.2023-ல் தெரிவித்துள்ளவாறு, காயல்பட்டினம் நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரம் தினதந்தி நாளிதழ் ஆயுத பூஜை தொழில் மலர் – 2023 –ல் அரசு சலுகை கட்டணத்தில் 23.10.2023-ந் தேதிய தினதந்தி செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய கட்டணம் ரூ.9,870/- ஐ வழங்க கோரி பட்டியல் எண். 2324TVL371035463 நாள். 24.10.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 25.10.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ.9,870/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.9,870/- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.540</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:13**

மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.128/செ.ம.தொ.அ/2023 நாள்:14.08.2023-ல் தெரிவித்துள்ளவாறு, காயல்பட்டினம் நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரம் தினகரன் நாளிதழ் ஆயுத பூஜை தொழில் மலர் – 2023 –ல் அரசு சலுகை கட்டணத்தில் 22.10.2023-ந் தேதிய தினகரன் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய கட்டணம் ரூ.9,828/- ஐ வழங்க கோரி Kal Publication (P) Ltd நிறுவனத்தின் பட்டியல் எண்.3300450360 நாள்.22.10.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 25.10.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ.9,828/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.9,828/- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.541</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:14**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34(6)-ன்படி, பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்வதற்கு வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/தி1-1 நாள்.03.04.2023-ல் தெரிவித்துள்ளவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களின் ந.க.எண்.477/2023/இ1 நாள்.24.07.2023 பரிந்துரை கடிதத்தின்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்படுத்தும் பணி (வார்டு எண்.10 எல். எப். ரோடு சர்வே எண்.83 & 84) மதிப்பீடு ரூ.550.00 இலட்சத்திற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24-ன் கீழ், பணிகள் மேற்கொள்ள அரசாணை (4D) எண்.39 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.14.09.2023-ன்படி, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/P1 நாள்.05.10.2023-ன்படி மேற்காணும் பணிக்கு 31.10.2023 அன்று பொதுவான ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்குரிய பணிகள் செயல்படுத்தும் பொருட்டு நகராட்சி பேருந்து நிலையம், உட்புறம் மற்றும் வெளிப்புற கடைகளை இடித்து புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டியுள்ளதால், இப்பொருள் தொடர்பாக காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் 22.07.2023 அன்று காலை 11.30 மணி அளவில் நடைபெற்ற பொது மக்களின் கருத்து கேட்பு மற்றும் கலந்தாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தில்

அமைந்துள்ள 21 எண்ணம் கடை உரிமைதாரர்களுக்கு பேருந்து நிலையத்தில் புதிதாக கடைகள் கட்டி முடிக்கும் வரை மாற்று இடம் தேர்வு செய்து, இந்நகராட்சி மூலம் தற்காலிக கடைகள் அமைத்து கொடுக்கும் பணி செய்வதற்கு ரூ.19.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், உரிய நடவடிக்கை தொடரும் பொருட்டும், மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. ரூ.19.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(கோப்பு எண். 477/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.542</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:15**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34(6)-ன்படி, பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்வதற்கு வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பினை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/தி1-1 நாள்.03.04.2023-ல் தெரிவித்துள்ளவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களின் ந.க.எண்.477/2023/இ1 நாள்.24.07.2023 –ந் தேதிய பரிந்துரை கடிதத்தின்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்படுத்தும் பணி (வார்டு எண்.10 எல். எப். ரோடு சர்வே எண்.83 & 84) மேம்பாடு செய்வதற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24-ம் ஆண்டு திட்ட மதிப்பீடு ரூ.550.00 இலட்சத்திற்கு, அரசாணை (4D) எண்.39 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள். 14.09.2023-ன்படி, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.10988/2023/P1 நாள்.05.10.2023-ன்படி மேற்காணும் பணிக்கு 31.10.2023 அன்று பொதுவான ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்குரிய பணிகள் செயல்படுத்தும் பொருட்டு நகராட்சி பேருந்து நிலையம், உட்புறம் 13 கடைகள் வெளிப்புற கடைகள் 8 மொத்தம் 21 கடைகளும், கட்டண கழிப்பிடம், இலவச கழிப்பிடம், ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்தி புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டியுள்ளதால், பேருந்து நிலைய கட்டிடத்தின் தன்மை குறித்து முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்களிடம் அறிக்கை பெறுவதற்கு, (Report on Structural Stability) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்பாடு செய்வதற்குரிய புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டியிருப்பதால், அதற்குரிய துவக்கக்கட்ட பணிகளான பழுதடைந்த பழைய பேருந்து நிலைய கட்டிடங்களை இடித்து அப்புறவுப்படுத்தும் பணி செய்வதற்கு, ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு, நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. திட்டப்பணியின் அவசியம் கருதி ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 477/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.543</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:16**

காயல்பட்டினம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் கீழ்கண்ட இடங்களில் உள்ள மின் மோட்டார்கள் பழுதடைந்து செயல்படாத நிலையில் உள்ளது. பொது சுகாதார நலன் கருதி அவற்றை பொறியியல் பிரிவின் மூலம் பழுது நீக்க பணிகள் செய்து தருமாறு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

1. கடையக்குடி MCC -1HPமின் மோட்டார்
2. கடற்கரை பொது கழிப்பிடம் -1/2 HP மின்மோட்டார்
3. விசாலாட்சியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள ஆடுஅடிக்கும் தொட்டி -1HP மின்மோட்டார்

மேற்கண்ட இடங்களில் உள்ள மின்மோட்டார்களை பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு பழுது நீக்க பணிகள் செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பணிகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.2224/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.544</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:17**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 புதுக்கடை தெரு பிரின்ஸ் வீதி குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி நடைபெற்றதால் ஏற்கனவே, அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மிகவும் பழுது ஏற்பட்டு குண்டும், குழியுமாக உள்ளது. வாகன போக்குவரத்துக்கு ஏதுவாக இல்லாமல் இருக்கும் இந்த சாலைகளில் பாதசாரிகள் நடந்து செல்வதற்கும், இடையூராகவும் உள்ளது. மேலும், இந்த பழுதடைந்த சாலைகளால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. ஆகவே, போக்குவரத்திற்கு ஏதுவாக, புதுக்கடை தெரு பிரின்ஸ் வீதி சாலை பதிவேடு குறியீடு எண்.139011L003 சிமெண்ட் கான்கிரீட் சாலை சீரமைக்கும் பணிக்கு ரூ.10,00,000/-க்கு (ரூபாய் பத்து இலட்சம்) தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கவும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பொது மக்கள் நலன் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி வருவாய் நிதி அல்லது அரசு திட்ட நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 2256/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.545</u>**

- அரசு மானியம் பெற்று சாலை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:18**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி நடைபெற்றதால் ஏற்கனவே, அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மிகவும் பழுது ஏற்பட்டு குண்டும், குழியுமாக உள்ளது. வாகன போக்குவரத்துக்கு ஏதுவாக இல்லாமல் இருக்கும் இந்த சாலைகளில் பாதசாரிகள் நடந்து செல்வதற்கும், இடையூராகவும் உள்ளது. மேலும், இந்த பழுதடைந்த சாலைகளால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதியிலுள்ள மழைநீர் வடிகால் இடிந்தநிலையில் தண்ணீர் செல்வதற்கு வசதியில்லாமல் இருப்பதால் அசுத்தம் ஏற்பட்டு கொசுக்கள் உற்பத்தியாகும் நிலை ஏற்பட்டு வருகிறது. ஆகவே, பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், போக்குவரத்திற்கு ஏதுவாகவும், வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் சாலை பதிவேடு குறியீடு எண்.139002S007 சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் மூடியுடன்கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.13,50,000/-க்கு (ரூபாய் பதின்மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம்) தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கவும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. ரூ.13.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பொது மக்கள் நலன் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி வருவாய் நிதி அல்லது அரசு திட்ட நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 2259/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.546</u>**

- அரசு மானியம் பெற்று சாலை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:19**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை சேவை இயக்கம் செப்டம்பர் 15ம் தேதி முதல் அக்டோபர் 2ம் தேதி வரை நடைபெற்றது. அதன்பிரகாரம் விழிப்புணர்வு பதாகைகள் ஏற்பாடு செய்தது மற்றும், நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு, நகரப்பகுதியில் உள்ள கே எம் டி மருத்துவமனை மூலம் முழுஉடற் பரிசோதனை நடத்தப்பட்டது. அந்த சமயத்தில் உணவு மற்றும் தேநீர் வழங்கிய வகைக்கும் மற்றும் விளம்பர பதாகைகள் தயார் செய்த

வகைக்கும் செலவின தொகை ரூ.4800/- ஆனது இவ்வலுவலக துப்புரவு பணி மேற்பார்வையாளர் திருமதி.லெட்சுமி என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி செலவினத் தொகையினை அந்த நபரின் பெயருக்கு இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பொது சுகாதார நலன் கருதி அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.547</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:20**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில், சுகாதார பணியாளர் மேம்பாட்டு திட்டம் – சுகாதார பணியாளக்ளை அடையாளம் காணுதல் தொடர்பான பயிற்சி கூட்டம் 26.09.2023 அன்று கோவில்பட்டி நகராட்சியில் வைத்து நடைபெற்றது. மேற்படி பயிற்சியில் இந்நகராட்சி சார்பாக தூய்மை இந்தியா திட்ட 2 பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவின் 2 உறுப்பினர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சியின் செலவின தொகையினை அந்தந்த நகராட்சிகள் பகிரிந்து கொள்ளுமாறு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெவேலி அவர்களின் 2800/2023/ஆ2 நாள் 25.09.2023ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியின் பங்கு தொகையாக ரூ.2000/-ம் தூய்மை இந்தியா திட்ட மேற்பார்வையாளர் திரு.மு.கணேஷ் என்பவரால் பயிற்சியின் போது செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத் தொகையினை தனியரின் பெயருக்கு இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.548</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 21**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலக நகர்மன்ற தலைவர் அறை, ஆணையாளர் அறை, பொது பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு, மற்றும் வருவாய் பிரிவு ஆகியற்றில் பொருத்தப்பட்டு செயல்பட்டு வரும் குளிருட்டும் கருவிகள் (Air Conditionor) 18 எண்ணம் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு 18 எண்ணம் குளிருட்டும் கருவிகளை பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்த வகைக்கு ரூ.9,450/- மட்டும் M/s.ஃபாஹிம் குலார் சர்வீஸ், காயல்பட்டினம் என்ற நிறுவனத்திற்கு வழங்க வேண்டியுள்ளது.

மேற்காணும் விபரப்படியான செலவினம் ரூ.9,450/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம்அங்கீரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.549</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 22**

காயல்பட்டினம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு 57(7)-ன் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குரிய செலவினங்கள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.550**

- பிரிவு 57(7) பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:23**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் செப்டம்பர் - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **இனங்கள்** | **நிலுவை & நடப்பு கேட்பு ரூ.** (**இலட்சத்தில்**) | **நிலுவை &நடப்பு வசூல் ரூ. (இலட்சத்தில்)** | **நிலுவை &நடப்பு நிலுவை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 190.25 | 121.75 | 68.50 |
| 2 | காலிமனை வரி | 19.36 | 13.74 | 5.62 |
| 3 | குடிநீர் கட்டணம் | 88.48 | 42.62 | 45.86 |
| 4 | வரியற்ற இனம் | 11.57 | 5.09 | 6.48 |
| 5 | தொழில்வரி | 17.63 | 3.14 | 14.49 |
| 6 | SUC Charges | 18.28 | 9.92 | 8.36 |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.551**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:24**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் செப்டம்பர் - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 138.63 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 52.54 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 5.09 |
| 160 | மானியங்கள் | 1-6 | 301.22 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 0.06 |
| 180 | இதர வருமானம் | I-9 | 8.96 |
| **மொத்தம்** | | | **506.50** |

| **செலவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
|---|---|---|---|
| 210 | ஊதிய செலவினங்கள் | **I-10** | 194.84 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | **I-11** | 40.01 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | **I-12** | 298.12 |
| **260** | நகராட்சி பங்குத்தொகை | **1-15** | **11.34** |
| **மொத்தம்** | | | **544.31** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **37.81** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.552**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**